CNR NO: TNTH13-003418-2024

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 48/2024

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
தேவாரம் காவல்நிலையம்,
குற்ற எண்.173/2023. ..... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

1).ஹரிஹரன் (வயது 28/2026),
த/பெ.மணி.

2).ஜெகதீஸ்குமார் (வயது 25/2026),
த/பெ.ஈஸ்வரன். ..... எதிரிகள்

**வழக்கின் சுருக்கம்**

<table>
<tr><th>வ. எண்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td colspan="2">இருதரப்பினர்களின் பெயர்கள்</td></tr>
<tr><td>குற்றமுறையீட்டாளர்:<br>சார்பு ஆய்வாளர்,<br>தேவாரம் காவல்நிலையம்.</td><td>எதிரிகள்:<br>1).ஹரிஹரன்,<br>2).ஜெகதீஸ்குமார்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | எதிரிகளின் வயது | 1).28/2026,<br>2).25/2026. |
| 3. | தந்தை/கணவர் பெயர் | 1).த/பெ.மணி,<br>2).த/பெ.ஈஸ்வரன். |
| 4. | மதம் | 1 மற்றும் 2 எதிரிகள் - இந்து. |
| 5. | தொழில் | 1).BSNL (Temporary),<br>2).வாட்டர் சர்வீஸ் (Arun Motor). |
| 6. | முகவரி | 1-வது எதிரி – No.38/5, தேவர் காலனி, கன்னிசேர்வைபட்டி. |
| | | 2-வது எதிரி – 25, W-5, தேவர் காலனி, கன்னிசேர்வைபட்டி. |
| 7. | தாலுகா, மாவட்டம் | 1 மற்றும் 2 எதிரிகள் – உத்தமபாளையம், தேனி. |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | 27.07.2023. |
| 9. | கைது | 1 மற்றும் 2 எதிரிகள் - 02.02.2024. |
| 10. | பிணையில் விடுவித்தல் | 1 மற்றும் 2 எதிரிகள் - 09.02.2024. |
| 11. | எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் | 1 மற்றும் 2 எதிரிகள் - 8 நாட்கள். |
| 12. | இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 07.04.2024. |
| 13. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 08.04.2024. |
| 14. | கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி | 02.05.2024. |
| 15. | கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 04.06.2024. |
| 16. | விசாரணை துவக்கம் | 04.07.2024. |

<table>
<tr><td>17.</td><td>சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td><table><tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>PW1</td><td>04.03.2026</td><td>04.03.2026</td></tr><tr><td>PW2</td><td>11.03.2026</td><td>11.03.2026</td></tr><tr><td>PW3</td><td>18.03.2026</td><td>18.03.2026</td></tr><tr><td>PW4</td><td>25.03.2026</td><td>25.03.2026</td></tr></table></td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td>27.03.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>27.03.2026.</td></tr>
<tr><td>20.</td><td>பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td><table><tr><th>Date</th><th>U/s</th><th>Cr.M.P. No.</th><th>Result</th></tr><tr><td>25.03.2026</td><td>311 Cr.P.C</td><td>1003/2026</td><td>Allowed</td></tr><tr><td>25.03.2026</td><td>294(3) Cr.P.C</td><td>1004/2026</td><td>Allowed</td></tr></table></td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td>விடுதலை.</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td>இல்லை.</td></tr>
<tr><td>23.</td><td>தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள்</td><td>இல்லை.</td></tr>
<tr><td>24.</td><td>மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு</td><td>இல்லை.</td></tr>
<tr><td>25.</td><td>பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு</td><td>இல்லை.</td></tr>
<tr><td>26.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>2026-ஆம் வருடத்தில் தான் அரசுத்தரப்பில் சாட்சிகள் முன்னிடப்பட்டது.</td></tr>
</table>

*****

இவ்வழக்கு 08.04.2024 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு,

இறுதியாக 27.03.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை - I திருமதி.M.தவமணிசெல்வி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.ராஜமோகன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது சட்டப்பிரிவுகள் 454, 380 இந்திய தண்டனைச் சட்டம் 1860-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இந்திய தண்டனைச் சட்டம் 1860 இ.த.ச எனவும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1). **<u>இறுதியறிக்கையின்படி அரசுத்தரப்பு வழக்கு</u>**:

கடந்த 27.07.2023-ஆம் தேதி காலை 07.00 மணியளவில் வாதி பொன்னையாவின் வீட்டில் திருடும் நோக்கத்துடன் TN 60 BZ 8169 Pleasure Plus பைக்கில் 1-வது எதிரி ஹரிஹரன் மற்றும் 2-வது எதிரி ஜெகதீஸ்குமார் ஆகிய இருவரும் வாதியின் வீட்டுக்குச் சென்று, வாதியின் வீடு திறந்திருந்ததால் வீட்டில் யாரும் இல்லை என்று தெரிந்து கொண்டு திருடும் நோக்கத்துடன் 2-வது எதிரியானவர் வீட்டுக்கு வெளியே நின்று கொண்டு, 1-வது எதிரி வீட்டு பெட்ரூம்குள் சென்று டேபிளில் இருந்த சுமார் 4.300 கிராம் எடை கொண்ட மயில்படம் போட்ட மோதிரத்தை திருடிச் சென்ற குற்றத்திற்காக, 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 454, 380–ன் கீழ் அரசுத்தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் 02.05.2024-ஆம் தேதியன்று இலவசமாக வழங்கப்பட்டது.

3). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. போதிய கால அவகாசத்திற்கு பின் கோப்புகளை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மீது முகாந்திரம் எழுந்ததால், 04.06.2024-ஆம் தேதியன்று 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 454, 380–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் பொய் வழக்கு, விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும், குற்றவாளி அல்ல என்றும் கூறினார்கள். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4). அரசுத்தரப்பில் சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசுத்தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 சான்றுப் பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5). **அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெறும் அரசுத்தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு**:

5.1). அ.சா.1 திரு.பொன்னையா சாட்சியத்தில், சுமார் மூன்று வருடத்திற்கு முன்பு தான், தனது மகன் வைத்து நடத்தும் மருந்து கடைக்கு காலையில் சென்று விட்டதாகவும், தனது வீட்டிற்கு பக்கத்தில் இருந்தவர்கள் கடைக்கு வந்து, தனது வீட்டின் கதவு பூட்டு உடைக்கப்பட்டு திறந்து இருப்பதாக தன்னிடம் கூறியதாகவும், தான் காலை 11.00 மணியளவில் வீட்டிற்கு சென்று பார்த்ததாகவும், தான் வீட்டின் உள்ளே சென்று பீரோவை பார்த்தபோது, பீரோவில் வைத்து இருந்த 50 ஆயிரம் ரூபாய்

பணம் மற்றும் 3 கிராம் எடையுள்ள மோதிரமும் காணாமல் போய் இருந்ததாகவும், காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், அந்த புகார் தான் கொடுத்தது என்றும், **புகார் அ.சா.ஆ.1** என்றும், மோதிரத்தை யார் எடுத்துச் சென்றார்கள் என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும், அதன்பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து மோதிரத்தை திரும்ப பெற்றுச் சென்றதாகவும், **மோதிரம் அடங்கிய புகைப்படம் எண்ணிக்கை - 2 அ.சா.பொ.1** என்றும் குறியீடு செய்து சாட்சியமளித்துள்ளார்.

5.2). அ.சா.4 சார்பு ஆய்வாளர் திருமதி.கிருஷ்ணவேணி சாட்சியத்தில், கடந்த 28.07.2023-ஆம் தேதி, 17.00 மணிக்கு, சார்பு ஆய்வாளர் ஜெகநாதன் தேவாரம் காவல்நிலைய பொறுப்பில் இருந்தபோது, பொன்னையா என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரின்பேரில், புகாரின் தன்மைக்கு ஏற்ப தேவாரம் காவல்நிலைய குற்ற எண்.173/2023, இ.த.ச பிரிவுகள் 454, 380-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** என்றும், 28.07.2023-ஆம் தேதி 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் முருகன், நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், **பார்வை மகஜர் அ.சா.ஆ.3** மற்றும் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** என்றும் குறியீடு செய்து சாட்சியமளித்துள்ளார்.

5.3). மேற்படி அ.சா.4 சார்பு ஆய்வாளர் திருமதி.கிருஷ்ணவேணி சாட்சியத்தில், சாட்சிகள் 1 முதல் 4 வரையானவர்களை தனித்தனியே விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, 01.02.2024-ஆம் தேதி சார்பு ஆய்வாளர் ஜெகநாதன் தேவாரம் டாஸ்மாக் கடை அருகே வாகன தனிக்கையில் இருந்தபோது, அவ்வழியாக இருச்சக்கர வாகனத்தில் வந்த 2 நபர்களான ஹரிஹரன் மற்றும் ஜெகதீஸ்குமார் இருவரையும், சாட்சிகள் வீரப்பராஜா மற்றும் ஜெகதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து, ஒப்புதல்

வாக்குமூலம் பெற்று, அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஹரிஹரனும், ஜெகதீஸ்குமார் இருவரும் 27.07.2023-ஆம் தேதி தம்மிநாயக்கன்பட்டியில் உள்ள பொன்னையா வீட்டிற்கு சென்று, டேபிள் மீது இருந்த தங்க மோதிரத்தை திருடியதாக ஹரிஹரன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5** என்றும் குறியீடு செய்து சாட்சியமளித்துள்ளார்.

5.4). மேற்படி அ.சா.4 சார்பு ஆய்வாளர் திருமதி.கிருஷ்ணவேணி சாட்சியத்தில், அதன்பின் எதிரி தனது கையில் அணிந்திருந்த தங்க மோதிரத்தை போலீசாரிடம் எடுத்து கொடுத்ததையும், எதிரி ஓட்டி வந்த TN 60 BZ 8169 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தையும் போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றி, மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், **அத்தாட்சி அ.சா.ஆ.6** என்றும், கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரையும் நிலையம் கொண்டு வந்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து, கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் - 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், **படிவம் - 91 அ.சா.ஆ.7** என்றும், சார்பு ஆய்வாளர் ஜெகநாதன் பணி மாறுதலில் சென்றதால், அதன் பின்பு வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் தெய்வகண்ணன் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக 06.03.2024-ஆம் தேதி இ.த.ச பிரிவுகள் 454, 380-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6). அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்குப் பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(b) பிரிவின் கீழ் 27.03.2026-ஆம் தேதி வினவியபோது, எதிரிகள் சாட்சிகள் கூறுவது பொய் சாட்சி என்றும், மேலும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்கள். பின்னர், போதிய வாய்ப்பிற்கு பிறகு எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7). அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு அரசுத்தரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

8). எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இடம்பெறவில்லை என்று வாதிட்டார். மேலும், அரசுத்தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் எதிரிகளை விடுதலை செய்யுமாறு கோரி வாதிட்டார்.

9).**<u>தீர்விற்குரிய பிரச்சினை</u>**:

இவ்வழக்கில் ஆராய்ந்து தெளிவு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 454, 380–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10). **<u>தீர்வும் அதன் காரணமும்</u>**:

10.1). அ.சா.1 பொன்னையா தனது மெடிக்கல் கடையில் இருந்து மதியம் 01.00 மணியளவில் தம்மிநாயக்கன்பட்டியில் உள்ள தனது வீட்டிற்கு சென்றபோது, அலமாரி மற்றும் பீரோ திறந்து கிடந்தது எனவும், உள்ளே வைத்திருந்த ரூ.50,000/-ம் பணம் மற்றும் ¾ பவுன் மயில் சின்னம் போட்ட மோதிரம், இதன் மதிப்பு ரூ.22,500/- காணாமல்

போனதாகவும், 27.07.2023-ஆம் தேதி காலை 07.00 மணியளவில் எதிரிகள் ஹரிஹரன், ஜெகதீஸ்குமார் ஆகியோர் இருவரும் TN 60 BZ 8169 என்ற Pleasure Plus இருசக்கர வாகனத்தில் சென்று, பொன்னையாவின் வீடு திறந்து இருந்ததால் 2-வது எதிரி ஜெகதீஸ்குமார் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டு, 1-ஆம் எதிரி ஹரிஹரன் வீட்டிற்குள் பெட்ரூம் சென்று, சுமார் 4.300 கிராம் எடை கொண்ட மயில் படம் போட்ட மோதிரத்தை திருடிய குற்றம் புரிந்ததாக அரசுத்தரப்பில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டு குறித்து பரிசீலனை செய்கையில்,

10.2). அ.சா.1 பொன்னையா தனது முதல் விசாரணையில், "**எனது மகன் வைத்து நடத்தும் மருந்து கடைக்கு காலையில் சென்று விட்டேன். எனது வீட்டிற்கு பக்கத்தில் இருந்தவர்கள் கடைக்கு வந்து எனது வீட்டின் கதவு பூட்டு உடைக்கப்பட்டு திறந்து இருப்பதாக என்னிடம் கூறினார்கள். நான் காலை 11.00 மணியளவில் வீட்டிற்கு சென்று பார்த்தேன். நான் வீட்டின் உள்ளே சென்று பீரோவை பார்த்தபோது, பீரோவில் வைத்திருந்த ரூ.50,000/-ம் பணம் மற்றும் 3 கிராம் எடையுள்ள மோதிரமும் காணாமல் போயிருந்தது. காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகார் அ.சா.ஆ.1. மோதிரத்தை யார் எடுத்தார்கள் என்று தெரியாது. அதன் பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து மோதிரத்தை திரும்ப பெற்றுச் சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மோதிரம்தான் நான் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்ற மோதிரம் ஆகும். மோதிரம் அடங்கிய புகைப்படம் எண்ணிக்கை - 2 அ.சா.பொ.1**" என குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

10.3). மேலும், அ.சா.1 பொன்னையா தனது குறுக்கு விசாரணையில், "**எதிரிகளை யார் என்று தெரியாது என்றால் சரிதான். அவர்களை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.4). மேலும், இது குறித்து அ.சா.4 கூடுதல் சாட்சி சார்பு ஆய்வாளர்

கிருஷ்ணவேணி தனது முதல் விசாரணையில், "**01.02.2024-ஆம் தேதி சார்பு ஆய்வாளர் ஜெகநாதன் தேவாரம் டாஸ்மாக் கடை அருகே வாகன தணிக்கையில் இருந்தபோது, அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்களான ஹரிஹரன் மற்றும் ஜெகதீஸ்குமார் இருவரையும், சாட்சிகள் வீரப்பராஜா மற்றும் ஜெகதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஹரிஹரனும், ஜெகதீஸ்குமார் என்பவரும் 27.07.2023-ஆம் தேதி தம்மிநாயக்கன்பட்டியில் உள்ள பொன்னையா வீட்டிற்கு சென்று, டேபிள் மீது இருந்த தங்க மோதிரத்தை திருடியதாக ஹரிஹரன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை, சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து, அதன்பின் எதிரி தனது கையில் அணிந்திருந்த தங்க மோதிரத்தை போலீசாரிடம் எடுத்துக் கொடுத்துள்ளார். அதையும், எதிரி ஓட்டி வந்த TN 60 BZ 8169 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தையும் போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றி, மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார்கள்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.5). அதாவது, 27.07.2023-ஆம் தேதி நடைபெற்ற சம்பவத்திற்கு 01.02.2024-ஆம் தேதி போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரிகள் இருவரும் ஒரு வாகனத்தில் வந்ததாகவும், அவர்களை விசாரித்தபோது, இந்த வழக்கு சம்பந்தமாக 1-வது எதிரி ஹரிஹரன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதனை சாட்சிகள் வீரப்பராஜா மற்றும் ஜெகதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், 1-வது எதிரி தன்னிடமிருந்து எடுத்துக் கொடுத்த மோதிரம் மற்றும் அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் குறிப்பிட்டு கூடுதல் சாட்சி அ.சா.4 கிருஷ்ணவேணி சாட்சியம் அளித்துள்ளார்.

10.6). மேலும், இது குறித்து அ.சா.2 வீரப்பராஜா தனது முதல் விசாரணையில், "**என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையது. அத்தாட்சியில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையது. அதனை**

**தேவாரம் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் கையொப்பம் கேட்டார்கள், போட்டுக் கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை**" என சாட்சியம் அளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியம் ஆக்கப்பட்டுள்ளார்.

10.7). மேலும், மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.3 ஜெகதீஸ்வரன் தனது முதல் விசாரணையில், "**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1-வது கையொப்பம் என்னுடையது. அத்தாட்சியில் உள்ள 1-வது கையொப்பம் என்னுடையது. அதனை தம்மிநாயக்கன்பட்டியில் வைத்து கையொப்பம் செய்தேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் கையொப்பம் கேட்டார்கள், போட்டு கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை**" என சாட்சியம் அளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியம் ஆக்கப்பட்டுள்ளார்.

10.8). எனவே, எதிரிகளை விசாரித்தபோது 1-ஆம் எதிரி தானாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாகவும் கூடுதல் சாட்சியான அ.சா.4 சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.2 தான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாகவும், அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களுக்கு இந்த வழக்கின் எதிரிகளை தெரியாது எனவும், வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியம் ஆக்கப்பட்டுள்ளனர்.

10.9). எனவே, அ.சா.ஆ.5 ஒப்புதல் வாக்குமூலம் இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 27-ன் கீழ் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, 1-வது எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலம்

நிரூபிக்கப்படாத நிலையில், இந்த வழக்கின் எதிரிகள்தான் அ.சா.1 பொன்னையா என்பவரின் வீட்டிற்குள் நுழைந்து, மோதிரத்தை திருடியதாக சொல்லப்படும் சம்பவம் அரசுத்தரப்பால் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கலாம் என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>தீர்வு</u>**

11). முடிவாக, 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 454, 380–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பால் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

12). **<u>கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழான உத்தரவு</u>**:

12.1). இவ்வழக்கின் P.R.No.10/2024-ல் கண்ட படிவம் 91-ல் காண்பிக்கப்பட்டுள்ள அ.சா.பொ.1 புகைப்படத்தில் கண்ட தடயச் சொத்தான நகையை இந்நீதிமன்றம் Crl.M.P.No.1222/2024 என்ற மனுவில் பிறப்பித்த உத்தரவின்படி இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 பொன்னையா என்பவர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீடு காலத்திற்குப்பின் மேற்படி பொன்னையா என்பவர் எழுதிக்கொடுத்த பிணைமுறியை இரத்து செய்ய கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

12.2). மேலும், இவ்வழக்கின் மற்றொரு தடயச் சொத்தான P.R.No.10/2024-ல் கண்ட படிவம் 91-ல் காண்பிக்கப்பட்டுள்ள அ.சா.ஆ.7-ல் கண்ட வழக்குச் சொத்தான Item No.2-ஆன TN 60 BZ 8169 என்ற பதிவெண் கொண்ட Aero Plusure + என்ற இருசக்கர வாகனத்தை இந்நீதிமன்றம் Crl.M.P.No.2821/2024 என்ற மனுவில் பிறப்பித்த உத்தரவின்படி மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளரான இவ்வழக்கின் 2-வது எதிரி ஜெகதீஸ்குமார் என்பவர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீடு காலத்திற்குப் பின் மேற்படி ஜெகதீஸ்குமார் என்பவர் எழுதிக்கொடுத்த பிணைமுறியை இரத்து செய்ய கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஏப்ரல் திங்கள் 10-ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.10 17:58:58 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.

**1. அரசுத்தரப்பு சாட்சிகளின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.பொன்னையா | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | திரு.வீரப்பராஜா | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு.ஜெகதீஸ்வரன் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி |
| 4. | அ.சா.4 | திருமதி.கிருஷ்ணவேணி | கூடுதல் சாட்சி |

**2). அரசுத்தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார். | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.4 |
| 3. | அ.சா.ஆ.3 | பார்வை மகஜர். | அ.சா.4 |
| 4. | அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம். | அ.சா.4 |
| 5. | அ.சா.ஆ.5 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. | அ.சா.4 |
| 6. | அ.சா.ஆ.6 | அத்தாட்சி. | அ.சா.4 |
| 7. | அ.சா.ஆ.7 | படிவம் - 91. | அ.சா.4 |

**3). அரசுத்தரப்பு சான்றுப் பொருள்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.பொ.1 | மோதிரம் அடங்கிய புகைப்படம் எண்ணிக்கை - 2. | அ.சா.1 |

**4). எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள்**: தாக்கல் இல்லை.

**5). குறிப்பு**:

1. சாட்சிகள் எவரும் 3 முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
2. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையிலிருந்து முன்னிலையானார்கள்.
3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.10 17:59:04 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.